செந்தமிழ்

தொகுதி :95 திருவள்ளுவர் ஆண்டு 2032 டிசம்பர் 2001 பகுதி : 12

திங்கள் இதழ்

பொன். பாண்டித்துரைச்சாமித் தேவர் நினைவுமலர்

தோற்றம் : 21- 03 - 1867. மறைவு : 02 - 12 - 1911

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி	தலைவர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. மா. சங்கர பாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டா. ந. சேதுராமன்	உறுப்பினர்
திரு. கே. கந்தசாமி	உறுப்பினர்
திரு. வெ. பழனிச்சாமித்தேவர்	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. க.சி. அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. அ. சாமிஐயா	உறுப்பினர்

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

செந்தமிழ்

திங்கள் இதழ்

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 2000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

மதிப்புறு ஆசிரியர் :

இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொருளடக்கம்

1. தமிழ் வளர்த்த பாண்டித்துரைத்தேவர் ...415
முனைவர்.செ. கந்தசாமி
2. பாண்டித்துரைத் தேவர் பாடியவை ...426
3. பாண்டித்துரைத்தேவர் மீது பாடிய இரங்கற்பாக்கள் ...430
4. மதுரைத்தமிழ்ச்சங்கம் தோற்றமும் பணிகளும் ...432
முனைவர். வீ.காந்திமதி
5. வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களது வாழ்க்கைக்குறிப்பு. ...447

தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர்

முனைவர்.செ. கந்தசாமி

மூவேந்தர்களும் கடையெழு வள்ளல்களும் முச்சங்கமும் மறைந்து போனபின் தமிழ்மொழியைத் தாழ்வுறாமல் தாங்கி நிறுத்திய பிற்கால மன்னர் மரபினருள் சேது மன்னர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். தெலுங்கு விஜயநகரத்தரசராலும் கன்னடம் மைசூர் அரசராலும் போற்றப்படுதல் போல், தமிழ் பிற்காத் தமிழ் வள்ளல்களான சேதுபதிகளால் போற்றப்பட்டு வந்தது. கடந்த இருநூறு ஆண்டுகட்கும் மேலாகத் தமிழகத்தில் வாழ்ந்த எந்தவொரு அறிஞரோ புலவரோ சேதுபதிகளின் வண்மை பெறாதவர்களாக இருந்ததில்லை என்று துணிந்து கூறலாம். இத்தகைய தமிழ் வள்ளல்களான சேதுபதிகளின் மரபில் தோன்றித் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தன்னுடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் வழங்கிய பெருமைக்குரியவர் வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்.

சிறந்த வள்ளலாகவும் தமிழறிஞராகவும், புலவர்கள் போற்றும் புரவலராகவும் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கிய பாண்டித்துரைத் தேவர் அவர்களின் சிறப்புகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதியின் (கி.பி. 1837 - 1870) உடன் பிறந்தவர், மூத்தவர் பொன்னுசாமித் தேவர். தந்தை சிவஞானத் தேவரின் மறைவிற்குப்பின் சேது நாட்டில் ‘சீமை பேஷ்கார்’ பதவியையும், தாய்மாமன் கோட்டைசாமித் தேவரின் மறைவிற்குப்பின் சேதுநாட்டின் அமைச்சர் பதவியையும் வகித்தவர். தம் இளவல் முத்துராமலிங்க சேதுபதிக்குப் பல வகையிலும் சிறப்பாக உதவியவர். எனவே, சேதுபதி தம் தமையனாரின் சேவையைப் பாராட்டி, ஆண்டொன்றுக்கு இலட்ச ரூபாய்க்கு மேல் வருவாய் தரக்கூடிய வகையில் பாளையம்பட்டிப் பகுதியை வழங்கினார். பொன்னுசாமித் தேவருக்குக் கோட்டைசாமித் தேவர், சீமைச்சாமித் தேவர், பாண்டித்துரைத் தேவர் எனும் ஆண்மக்கள் மூவரும் பெண்மக்கள் மூவரும் இருந்தனர். இங்குக் குறித்த

பாண்டித்துரைத் தேவரே மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர்.

தந்தை பொன்னுசாமித் தேவரின் தமிழறிவும் ஆராய்ச்சி வன்மையும் பாண்டித்துரைத் தேவரிடம் நன்கு அமைந்திருந்தன.அழகர்ராசு என்பவரிடம் தொடக்கக் கல்வியையும், வக்கீல் வேங்கடேஸ்வர சாஸ்திரியிடம் ஆங்கிலக் கல்வியையும், சதாவதானம் முத்துசாமி அய்யங்காரிடம் தமிழ்க் கல்வியையும், மதுரை இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையிடம் காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம் முதலிய சைவ நூல்களையும் பாடம் கேட்டார். இவருக்குச் சைவசாத்திரங்களின் மீது சீரிய ஞானத்தை ஊட்டியவர் திருவாவடுதுறை ஆதீனத்துப் பழனிக்குமாரத் தம்பிரான் ஆவார். பாண்டித்துரைத் தேவர் புகைப்படக்கலை, மல்யுத்தம், குதிரையேற்றம் முதலிய கலைகளிலும் சிறந்து விளங்கினார். சிறந்த சொற்பொழிவாளராகவும் ஆராய்ச்சி வல்லுநராகவும் திகழ்ந்தார்.

பாண்டித்துரைத் தேவர் பல தனிப்பாடல்களையும் மூன்று நூல்களையும் எழுதியுள்ளார். சிவஞான சுவாமிகள் மீது 3 பாடல்களும் விக்டோரியா அரசி மீது 2 பாடல்களும் திருவாவடு துறை ஆதீனவித்வான் இராமசாமிப்பிள்ளை என்னும் ஞானசம் பந்தப் பிள்ளை மீது 4 பாடல்களும் பாசுக்கரசேதுபதி இறந்தபோது பாடிய 6 இரங்கற் பாடல்களும் குறிப்பிடத்தக்கன.

'கலைதேர்நமச்சி வாயகுரு கருணைக்கடலிற் றிளைத்தாடிக்
கலகப்பாசத் தொடரறுத்துக் காமத்தறியை யறவீழ்த்தி
யலையுஞ்சமயத் தருக்களைக்கீ ழடிவேரோடு மகழந்தெறிந்திட்
டருளின்படாத்தை முகமேற்கொண் டாதிவேதா கமங்
களெனுந்
தொலையாமணிக ளிருமருங்குந் தொனிக்கச்சைவ மதம்பொழிந்
துங்கமோடு முலகமுற்றுஞ் சுற்றும் வெற்றிவாரணமே
மலையாதருளு முனிவர்சிகா மணியே வருக வருகவே
வளமார்துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே'

எனச்சிவஞான சுவாமிகளை மதயானையோடு உருவகித்துப் பாடிய பாடலும்,

"என்னாவி யுளங்குளிர அண்ணாவென் றன்பொடினி யெனையார்
சொல்வார்
மன்னாமன் னாமன்னா வென்றாரை யானினிமேன் மதித்துச்
சொல்வேன்
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு புரந்தளிக்கப் போந்த நீவே
றெந்நாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே
யிசைத்தி டாயே"

எனப் பாசுக்கர சேதுபதியின் மறைவிற்கு ஆற்றாது பாடிய இரங்கற்பாடலும் இவர்தம் இயற்றமிழ்ப் புலமைக்குச் சான்று பகர்வன.

இவர் 'இராசராசேசுவரி பதிகம்,' 'சிவஞான சுவாமிகள் இரட்டைமணி மாலை', 'சிவஞானபுரத்து முருகக் கடவுள் மீது காவடிச் சிந்து' ஆகிய மூன்று நூல்களைப் பாடியுள்ளார்.

பாண்டித்துரைத் தேவர் தம் குலதெய்வமாகிய இராஜராஜேஸ்வரி அம்மன் மீது பாடியது இராஜராஜேஸ்வரி பதிகம். சிவஞான சுவாமிகளின் திருவுருவைத் திருவாவடுதுறையில் வணங்கச் சென்ற போது மனமுருகிப் பாடியது சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை. சிவஞானபுரத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள் மீது பாடியது காவடிச்சிந்து. ஒருநாள் பாண்டித்துரைத் தேவரும் தமிழறிஞர்களும் இராமநாதபுரத்தில் கூடிப்பேசிக் கொண்டிருக்கையில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தினைப் போல் பாடவல்லார் இல்லை என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது. அதுகேட்ட பாண்டித்துரைத்தேவர், இறைவன் திருவருள் உளதேல் அதனினும் சிறக்கப் பாடுதல் கூடும் என்ற கருத்தினைத் தெரிவித்தார். அவ்வாறெனில் அவர்களே இத்தகையதொரு நூலைப் பாடவேண்டுமென அங்குக் குழுமியிருந்த அறிஞர்கள் கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கப் பாண்டித்துரைத் தேவர் இந்நூலைப் பாடினார். மோனை, திரிபு, யமகம், சிலேடை, கற்பனை ஆகியவற்றை ஆங்காங்கே வேண்டியவாறு அமைத்துப் படிப்பவர், கேட்பவர் மனங்களிக்குமாறு பாடப்பட்டது இந்நூல்.

சான்றாக ஒருபாடல்:

"நஞ்சார் திருக்களத்துப் பஞ்சான னத்தவர்க்கு
நனிமகிழ் வைத்தரு தனையனெனத் திகழ் நாதனே - நாளும்
புனித மனத்தவரினிது வழுத்திய போதனே.

அஞ்சா விறற்புயக்ர வுஞ்சாசுரச சழக்கன்
அடலொழியத் தனிசுடரயிலைத் தொடு மய்யனே - அகல்
கடலுலகிற்பல இடர்களொழித் தருள் செய்யனே.

பண்ணார் மொழிக்குறத்தி கண்ணாசை மெத்தவைத்துப்
பரவு புனத்திடை யிரவு தனிற்றிரி பாதனே - குளிர்
சரவணநற் பெயர் விரவு தடத்தெழு நீதனே

எண்ணாதிழித் துரைக்கும் நண்ணார் குலத்தை முற்ற
இகல்வித் தெமநகரி புகுத்திய ஈசனே - என்றும்
புகல்புரி பத்தர்தம் அகமருவித் திகழ் நேசனே."

பாண்டித்துரைத் தேவர் உரைநடை எழுதுவதிலும் வல்லவர். 'தமிழ்ப் பழஞ்சரிதம்', 'திருக்குறளைப்பற்றிய கதைகள்' என்பன இவரது கட்டுரைகள். இவை வடசொற் கலப்பில்லாத தூய தமிழ் நடையில் அமைந்தவை.

பாண்டித்துரைத் தேவர் பாவலராக மட்டின்றிச் சிறந்த நாவலராகவும் திகழ்ந்தார். சென்னை முதலிய பெரு நகரங்களிலுள்ள அறிஞர்கள் அவரை அழைத்துச் சொற்பொழிவு ஆற்றச் செய்தனர். அரச இலக்கணம் அமைந்த இவருடைய தோற்றமும் பொருள் நிரம்பிய சொல்வன்மையும் ஆங்கிலப் பேரறிஞர்களையும் புலவர் பெருமக்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தின. ரா.பி. சேதுபிள்ளை பாண்டித்துரைத் தேவரையும் அரசஞ்சண்முகனாரையும் திருநெல்வேலியில் நடந்த சைவசமய மாநாட்டிற்கு அழைத்துப் பேச வைத்துள்ளார். மேடையில் அமர்ந்திருந்த பாண்டித்துரைத் தேவரின் தோற்றப் பொலிவினைக் கண்ட ரா.பி. சேதுப்பிள்ளை, 'தமிழே உருவெடுத்தாற் போல் தேவர் அமர்ந்திருந்தார்' என்கிறார். வ.உ.சிதம்பரம்பிள்ளைக்கும் பாண்டித்துரைத் தேவருக்கும்

நெருங்கிய தொடர்புண்டு. இவரை ஒருமுறை தூத்துக்குடி சைவசித்தாந்த மாநாட்டிற்கு அழைத்துச் சென்று தலைமை ஏற்கச் செய்ததோடு அவரே பாண்டித்துரைத் தேவருக்கு வாழ்த்துக்கவி ஒன்றும் இயற்றி வழங்கியுள்ளார். வ.உ.சி யின் கப்பல் கம்பெனிக்குத் தேவர் ரூ 1லட்சம் வழங்கியுள்ளார் என்ற செய்தியும் ஈண்டு நினைகூரத்தக்கது.

கம்ப இராமாயணம், திருக்குறள், சைவ நூல்கள் இவற்றுள் ஏதாவதொன்றை ஆய்வு செய்தல், அதன் பொருள் நுட்பங்களை எடுத்துரைத்தல், பிறர் உரைப்பன கேட்டு மகிழ்தல் ஆகியவற்றில் தேவர் நாள்தோறும் பொழுதைக் கழித்து வந்தார். பாண்டித்துரையாரின் ஆராய்ச்சி அறிவு பற்றி மு. இராகவையங்கார், "திருக்குறள் பரிமேலழகருரையுடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வோரதிகாரமாக இவர்களால் உபந்நியாசம் செய்யப்பட்டு வந்தது. தொடர்ந்து நடந்து வந்த இவ்வரிய பொருளுரை கேட்பவர்களுக்கெல்லாம் நல்விருந்தாயிருந்தது. இவைகளை விடாது உடனிருந்து கேட்டவர்களுள் யானும் ஒருவன். இவ்வாறே கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பேரிலக்கியங்களில் ஒன்றேனும், கந்தபுராணம், காஞ்சிப்புராணம், திருவிளையாடல் போன்ற புராணங்களில் ஒன்றேனும் வேறு சில்லறைப் பிரபந்தமேனும் படிக்கப்பெற்றும் பொருள் ஆராயப்பெற்றும் நாளும் தவறாது தேவரவர்களின் திருமுன்பு நடந்தேறுவது வழக்கம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈற்றெழுத்துக் கவிகள் கூறுதலும், தம்பாலுள்ள புலவர் ஒருவரைக் கொண்டு சொற்பொருள் நிகழ்த்தச் செய்தலும் பாடற்பொருள் கூறச் செய்தலும் தேவரால் அடிக்கடி நடத்தப் பெற்றன. இம்முறை பாடமான செய்யுட்கள் மறவாதிருத்தற்குப் பயன்பட்டன. இது நம் முன்னோர்கள் கண்ட முறையாகும்.

புலவர்களைப் போற்றியமை:

தந்தை பொன்னுசாமித் தேவரின் தமிழறிவும் வள்ளண்மையும் பாண்டித்துரையாரிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. இவரிடம் பொருளுதவி பெற்றுத் திளைத்தவர்கள்

பலர். அவர்களுள் சோழவந்தான் அரசஞ்சண்முகனாரும் ஒருவர். அரசஞ்சண்முகனார் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகச் சில காலம் பணிபுரிந்துவிட்டு மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். பல நூல்களை இயற்றியவர். இவர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றியபோது வயிற்றில் கட்டி ஏற்பட்டுத் துன்புற்றார். இவர் நோய் தீரப் பாண்டித்துரைத்தேவர் பொருளுதவி செய்துள்ளார். இதனை அரசஞ்சண்முகனார், தம்முடைய தொல்காப்பியப் பாயிர விருத்தியின் முன்னுரையில், "முன்னரே நோய்முற்றி வயிற்றினுள் நாபியின் கீழ்க் கழலை யொப்பத் திரண்டு இருமலமும் வெளிப்படா வண்ணம் தடுத்து ஆவிபோக்க முயன்றது. அக்காலப் பல சுதேச மருத்துவரிடத்தும் பல ஆங்கில மருத்துவரிடத்தும் சென்று பிணி தீர்த்துக் காத்தல் வேண்டுமெனப் பெரிதும் வேண்டினேன். அவரெல்லாரும் அந்நோய் கருவிகொண்டு சேதிக்கற்பாற்று என்றும் அதுவும் முற்றியபடியால் இனிச் செய்யின் உயிர்க்கேடு செய்யும் என்றும் சொல்லினர். பின்னர்ப் பிறநாடு சென்றாயினும் பிணிதீர்ப்பான் கருதி, யான் அக்காலைச் சேதுபதி கலாசாலையில் கற்பிக்கும் தொழில் பெற்றிருந்தமையால், மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தலைவரும் பாலவனத்தம் அரசரும், உத்தமகுணமேருவும், வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை எனக் கொண்ட பெருவள்ளலு மாகிய உயர்திரு பாண்டித்துரைத் தேவர் அவர்களைக் கண்டு நடந்தன உரைத்தேன். உடனே அவர்கள், கலாசாலையில் யாம் பெற்று வந்த ஊதியத்தை ஓராண்டுவரை வேலையின்றிப் பெறுமாறு ஆணை செய்து அளித்ததூஉம் அன்றி இருநூறு வெண்பொற்காசும் பரிசிலாக அளித்தார்கள். அவர்கள் செய்த பேருதவியினை யான் என்றும் மறவேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டித்துரையாரின் பொருளுதவி பெற்றுத் திளைத்தவர்களுள் மற்றொருவர் திருநாராயணையங்கார். இவர் தமிழ்ச் சங்கத் தலைமை ஆசிரியராக 1901ல் நியமிக்கப் பெற்றார்.1910-லிருந்து செந்தமிழ் ஆசிரியராகப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து 36 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். சிறந்த நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தவர். பாண்டித்துரைத் தேவர் தாம் இறப்பதற்குச் சின்னாட்களுக்கு

முன்னர் இவருக்கு மதுரையில் வீடு வாங்கிக் கொள்ள ரூ5000 நிதி தந்துதவினார். ஆனால் இவர் 2500 ரூபாய் அளவில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி எஞ்சிய தொகையைப் பாண்டித்துரைத் தேவரிடமே திருப்பிக் கொடுக்க, அதைப் பாண்டித்துரையார் விளைநிலன் வாங்கிக் கொள்ளக்கூறி அய்யங்காரிடமே தந்துவிட்டார். அய்யங்கார் பாண்டித்துரையாரின் பேருதவிக்காகத் தமிழ்ச் சங்கத்தின் உண்மை ஊழியராகத் தாம் இறக்கும் வரையில் பணிபுரிந்துள்ளார்.

பாண்டித்துரைத் தேவரும் பதிப்புப் பணியும்

பாண்டித்துரையாரின் தலையாய தமிழ்ப்பணிகளுள் அவரது நூற்பதிப்புப் பணியும் ஒன்றாகும். தாமே சிறந்த பதிப்பாசிரியராக இருந்து பல நூல்களைப் பரிசோதித்தும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். பன்னூற் றிரட்டு (தொகுத்துப் பரிசோதித்தது), சைவமஞ்சரி(தொகுத்துப் பரிசோதித்தது), அகப்பொருள் விளக்கம் மூலமும் உரையும்(பரிசோதித்தது), திருவாலவாயுடையார் திருப்பணிமாலை(பரிசோதித்தது), மதுரைத் தலவரலாறு (பரிசோதித்தது) ஆகியன குறிப்பிடத்தக்கன. பல தமிழ் நூல்களில் அமைந்துள்ள நல்ல பல பாடல்களைத் திரட்டி அதிகார அடைவு கொடுத்துப் பதிப்பித்து வெளியிட்ட வகையில் பன்னூற்றிரட்டு தமிழுலகின் முதல் திரட்டுநூல் ஆக விளங்குகிறது. இத்தைகைய அரிய செயலைச் செய்தவரும் பாண்டித்துரையாரே என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னரே சதகத்திரட்டு போன்ற பல திரட்டு நூல்கள் தோன்றின. பன்னூற் றிரட்டைப் போலவே சைவ மஞ்சரியும் இவரால் தொகுத்துப் பதிப்பிக்கப் பெற்றது. சைவ சமயத்தார் அறிய வேண்டுவதாகிய பதிபசுபாச இலக்கணம். வீடடைதற்குரிய வழிகள், திருநீறு கண்டிகை இவற்றின் சிறப்புகள், அடியார் பெருமை ஆகியவை பற்றிய செய்திகளடங்கிய பல நூல்களின் செய்யுட்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

உ.வே.சாமிநாதையர், மதுரை இராமசாமிப் பிள்ளை என்ற ஞானசம்பந்தப்பிள்ளை, சபாபதி நாவலர், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், ஆ.சிங்காரவேலு முதலியார், சே.ரா.சுப்பிரமணியக்

கவிராயர், திருநாராயணையங்கார் ஆகியோரின் பதிப்புப்பணி சிறப்புடன் அமையப் பாண்டித்துரையாரின் பொருளுதவி காரணமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகது.

பாண்டித்துரைத் தேவரின் பொருளுதவி பெற்று உ.வே.சாமிநாதையரால் பதிப்பிக்கபெற்ற நூல் புறப்பொருள் வெண்பாமாலை மூலம் உரையும் ஆகும். இதனைப் பதிப்பித்தற்குப் பாண்டித்துரைத் தேவர் 500 ரூபாய் அனுப்பி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு 17.12.1894-ல் ஒரு செய்யுட்கடிதம் எழுதினார் அதனுள்,

"பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்றெரி வோரென்று யுண்மை நாடி- முயன்றிதுபோ
தைந்நூறு ரூபாவனுப்பி னேஃறேற் றருள்வாய்
மெய்ந்நூ றுரீஇயொ வித்தகா - மைந்நூறி
யாமாலையிற் சுவையுண் டாக்கும் புறப் பொருள்வெண்
பாமாலையச் சிறப்பதிவு செயுமா முயற்சி
யூறிகந்து முற்றலுறு விப்போனோங் குகவா
வானுகந்த சென்னி யாருள்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறே அய்யரால் பதிப்பிக்கப் பெற்ற மற்றொரு நூல் மணிமேகலை. இதுவும் பாண்டித்துரையாரின் பொருளுதவி கொண்டே பதிப்பிக்கப் பெற்றுள்ளது என்பதை அதன் தலைப்புப் பக்கத்தில் குறித்துள்ளார் உ.வே.சா. அதில், மணிமேகலையைக் கவலையின்றி ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்துதற்குப் பொருளுதவி செய்த மகா-ள-ள-ஸ்ரீ பொ.பாண்டித்துரைத் தேவரவர்களுடைய தண்ணளியும் பெருந்தகைமையும் ஒரு பொழுதும் மறக்கற்பாலனவல்ல மிகவும் பாராட்டற் பாலன. இதைப்போன்று எத்தனையோ பெரிய காரியங்களைத் திருந்தமாகச் செய்து நிறைவேற்றியவர்களின் வழித்தோன்றலாய் மிக்க பாண்டித்தியமடைந்து நூலாராய்ச்சியே இன்பத்துளின்பமெனக் கொண்டு வாழும் அப்பிரபு அவர்களுக்குப் பழைய நூல்களையும் அவற்றினுரைகளயும் பதிப்பித்து வெளிப்படச் செய்து அமிழ்தனுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும் படிப்பாரும் கேட்பாருமின்றி மூலையிலே மறைந்து கிடக்கும் அரிய

பெரிய நூல்களைத் தேடித் தொகுத்துப் படித்துக் கொண்டு அநாதரவுற்றிருப்போர்க்கு அஃது அரியதினும் அரியதாகத் தோன்றுமென்பது திண்ணம்" எனப் பாராட்டியுள்ளார். இவ்வாறே உ.வே.சா. பதிப்பித்த திருவிளையாடற்புராணமும் பாண்டித்துரையாரின் பொருளுதவி கொண்டே பதிப்பிக்கப் பெற்றது. உ.வே.சா பதிப்புப் பணியில் ஈடுபட்ட காரணத்தினால் பொருளாதார முட்டுப்பாட்டால் கவலை எய்திய காலங்களில் அவரின் பதிப்பு நூல்கள் பலவற்றை மொத்தமாக விலைக்கு வாங்கியும் உதவியுள்ளார்.

மதுரை இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு தேவாரத் தலமுறை, சிவஞான சுவாமிகளின் பிரபந்தத் திரட்டு ஆகியவற்றையும், சிவஞானமுனிவரின் சிவசமவாதவுரை மறுப்பு எனும் நூலைச் சபாபதி நாவலரைக் கொண்டு உரை எழுதச் செய்தும் வெளியிட்டுள்ளார். சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரைக் கொண்டு தண்டியலங்காரத்திற்குப் புத்துரை ஒன்று எழுதச் செய்து வெளியிட்டுள்ளார். இந்நூலின் பாயிரத்தில் புலவர்,

"நிலம்பாவுந் தமிழ்குரவ ரிறையனா
ரரசுபுரி நேய மிக்க
நலம்பாவுங் கூடனகர்ச் செழியர்புறந்
தந்தவா நயமிக் கோங்கப்
புலம்பாவு மச்சங்க மதுரைநிறீஇ
வளரிசையிற் புவனி தேய்த்த
பொலம்பால வனத்தஞ்ச மீன்பாண்டித்
துரைத்தேவன் புதுக்க வென்ன".

எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டித்துரைத் தேவரின் பொருளுதவி கொண்டு வெளிவந்த குறிப்பிடத்தக்க மற்றொரு நூல் அபிதான சிந்தாமணியாகும். இதனைத் தமிழில் எழுந்த முதல் கலைக் களஞ்சியம் என்றே கூறலாம். இதனைத் தொகுத்தவர் சென்னை பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் ஆ.சிங்காரவேலு

முதலியார் ஆவார்.இந்நூலைப் பதிப்பிக்கப் பொருளுதவி இல்லாமல் துன்பப்பட்டதையும், பலரிடம் உதவி கேட்டு மறுக்கப்பட்டதையும், இவரின் விளம்பரத்தைக் கண்டு பாண்டித்துரையாரே சென்னைக்கு வந்து அதனைப் பெற்றுத் தாமே பதிப்பித்ததையும் வாயாரப் புகழ்ந்துள்ளார்.

ஞானாமிர்தம், மகாபாரதம் ஆகியன சே.ரா.சுப்பிரமணியக் கவிராயரால் பதிப்பிக்கப் பெற்றன. மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும் காஞ்சி நாகலிங்க முனிவரால் பதிப்பிக்கப் பெற்றது. இந்நூல்கள் அனைத்தும் பாண்டித்துரையாரின் பொருளுதவி கொண்டே வெளிவந்தன.

பாண்டித்துரையாரின் பதிப்புப் பணிகளுள் மற்றொரு குறிப்பிடத்தக்க பணி தமிழ்ச் சொல்லகராதி வெளியிட்டதாகும். இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்துக் கதிரைவேற் பிள்ளை. தமிழுக்கு விரிவகராதி ஒன்று சிறந்த முறைகளைத் தழுவி இயற்றுவித்து வெளியிட வேண்டுமென்ற ஆசை பாண்டித்துரையாருக்கு இருந்தது. இவரின் விருப்பத்தை அறிந்த கதிரைவேற் பிள்ளை மகனார் வழக்கறிஞர் பாலசிங்கம் அகராதியைப் பாண்டித்துரைத் தேவரிடம் கொடுக்க அது தமிழ்ச் சங்க வெளியீடாக 1905, 1910 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தது. 1905 ல் அகர வருக்கம் முடியவும் 1910 ல் உயிர் வருக்கம் முழுதும் அடங்கிய முதற்பாகமும், தேவரின் மறைவிற்குப் பின் எஞ்சிய உயிர்மெய் வருக்கம் இரண்டு பாகங்களாக 1914 ல் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தது.

சாதக சந்திரிகை என்ற வடமொழிச் சோதிட நூலைத் திருநாராயணையங்காரைக் கொண்டு வெளியிட்டுள்ளார். தேவரின் காலத்தில் எழுத்துச் சீர்திருத்தப் பணியும் நடந்துள்ளது. தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களை அமைத்துக்காட்டித் திருநாராயணையங்காரால் எழுதப்பட்ட நூல் ‘பாண்டியம்’ ஆகும். இந்நூல் வெளிவருவதற்கு முழுதும் காரணமாக இருந்தவர் பாண்டித்துரைத் தேவர். இவரின் பொருளுதவியால் வெளிவந்த

இந்நூலுக்குப் பாண்டியம் எனப் பெயர் வைத்தார் திருநாராயணையங்கார். இது செந்தமிழின் 31 ஆவது வெளியீடாக 1910ல் வெளிவந்தது.

தமிழ்நாட்டின் உண்மை வரலாறுகளை நம்மவர் நன்கறியும்படி செய்வதைத் தமது நோக்கமாகக் கொண்ட பாண்டித்துரையார் செந்தமிழ் இதழில் பல அரிய வரலாற்றுக் கட்டுரைகளையும் சாசனக் கட்டுரைகளையும் அறிஞர்களைக் கொண்டு வெயிடச்செய்தார். து.அ.கோபிநாத ராவின் 'சோழவமிச சரித்திரச் சுருக்கம்' இம்முறையில் வெளிவந்ததாகும்.

முடிவுரை:

தமிழகம் செய்த தவப்பயனாகத் தோன்றிய பாண்டித்துரைத் தேவர் சிறந்த இயற்றமிழ் வல்லுநராகவும், புலவர் போற்றும் புரவலராகவும் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். அன்னாரின் அளப்பரிய தமிழ்ப்பணியை நினைவு கூர்வோமாக.

பாண்டித்துரைத்தேவர் பாடியவை

திருவாடுதுறை யாதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தராகிய
மாதவச்சிவஞான யோகிகள் மீதியற்றிய கவிகள்.

*திருக்கும்பவத்தை யகற்றுமருட் செல்வாவருக நால்வேத
சரமெய்ப்பொருளை யுணர்ந்தமுதற் றேவாவருக வெம்முயிரைக்
கருக்கும்வினையை நீக்குகளை கண்ணேவருக சுவைநிறைந்த
கனியேவருக கருணைரசக் கரும்பேவருக கருத்தழிந்து

தருக்குஞ்சமய கோடியெலாந் தகர்த்துச்சைவ மினிதோங்கத்
தமிழின்மாபா டியம்வகுத்த தலைவாவருக சயிலாதி
வருக்கத் துயர்ந்து விளங்குசிந்தா மணியேவருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே.
(க)

நதியைக் கரந்த சடைப்பெருமான் நயனத் தீயாற்
பொடியானோன்
நாளவனசக் கணையுமெய்தா நலனார்ஞானத் திருவுருவாய்ப்
பொதியக் குறுமா முனிவரத்தாற் புவியிற்பிறந்து புகழ்நிறைந்து
பொய்யைத் தணந்து மெய்யுணர்ந்து புனிதாத்துவித
நெறிப்படியே
பதியைப் பசுவைப் பாசத்தைப் பரமமோன நிலையினையிப்
படியென்றறியப் பணித்தருளாற் பவசாகரத்தி லுழலாதெம்
மதியைத் திருத்திக் கதியளிக்கும் வாழ்வேவருக வருகவே
வளமார்துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே.
(உ)

கலைதேர்நமச்சி வாயகுரு கருணைக்கடலிற் றிளைத்தாடிக்
கலகப்பாசத் தொடரறுத்துக் காமத்தறியை யறவீழ்த்தி
யலையுஞ்சமய தருக்களைக்கீ ழடிவேரோடு மகழ்ந்தெறிந்திட்
டருளின் படாத்தை முகமேற்கொண் டாதிவேதா கமங்களெனும்

தொலையாமணிக ளிருமருங்குந் தொனிக்கச்சைவ

மதம்பொழிந்து

துங்கமோடு முலகமுற்றுஞ் சுற்றும்வெற்றி வாரணமே
மலையாதருளு முனிவர்சிகா மணியேவருக வருகவே
வளமார்துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே.

(ங)

பாஸ்கரசேதுபதி மகாராஜா அவர்கள் சிவபதமடைந்தமைக் காற்றாது பாடியவை.

சேதுபதி மன்னர்குலக் கடற்றோன்றி யருணனையே சேர்ந்தோ ராழி, மேதினியெங் கணுஞ்செலுத்தி யிரவொழித்துப் புகழொளியை விரித்துத் தேன்போ, லோதுபிர சங்கமழையுவந்துதவு பாற்கரநீ யொடுங்குங் கால, மீதுகொலோ வின்னமுநீ யெய்துவையோ விரங்கியெமக் கிசைத்தி டாயே. (க)

என்னாவி யுளங்குளிர அண்ணாவென் றன்பொடினியெனையார் சொல்வார், மன்னாமன் னாமன்னா வெனயாரையானினிமேன் மதித்துச் சொல்வேன், பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடுபுரந்தளிக்கப் போந்த நீவே, றெந்நாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே யிசைத்தி டாயே. (உ)

அவியுணவொன் றேய்ருந்து மமரருண வவியாவுன் னமுத வாக்காற், செவியுணவுங் கொடுப்பதற்கோ் நிதிமணியைத் தருகாம தேனு வென்னு, மவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து கொடுக்குநல மறைதற் கோவிப், புவியிலெமை வருந்தவிட்டு வானடைந்தாய் பாற்கரநீ புகன்றி டாயே. (ங)

நீணிலமீ தரனடியார் பெருமையுமன் னவன்சமய நெறியும் பல்கான், மாணவெடுத் தெடுத்துரைத்துந் திருந்துகிலார் மடமதியின் வலிமை காணூஉ, வீணிதென வானடைந்தாய் பாற்கரசேதுபதியவண் மெய்யில் போகம், பேணுநரை யுளந்தெருட்டி யுய்விப்பான் விழைந்தனையோ பெரும நீயே. (ச)

பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு தியஞான்று பரிவு கூர்ந்து,நண்புலவு திருவாக்காற் றளர்வொழிகென் றெனக்கிசைத் தநலம் பொய் யாதே, மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை யா தெனவே மதித்து வான்போய், விண்புலவ ரோடுதமனியங் கொணர நினைந்தனையோ வேந்த ரேறே. (ரு)

<u>பாஸ்கர சேதுபதி மறைந்த நாளைப் பாடியது</u>

சோபகிரு தாண்டொன்பான் றூய்மதியீ ராறுவளர்
மாபிறையெண் ணாளிரவி வாரமீன் - நீபமலை
மாதுபதி தூக்கு மலரடியைப் பாற்கரனாஞ்
சேதுபதி சேர்ந்த தினம்.

பாண்டித்துரைத்தேவர் இயற்கை எய்திய ஆண்டு, நாள் குறித்துக் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை பாடியது:

"விரோதி கிருதே விருச்சிகமே யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா - குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற்ற தோ"

புலவர்பாடும் புரவலராக விளங்கிய பாண்டித்துரைத் தேவர்மீது புலவர்கள் பாடிய பாடல்கள் சில: .

1. உ.வே.சாமிநாதையர் தம்முடைய மணிமேகலைப் பதிப்பிற்குப் பொருளுதவியமைக்காக 1.12.1894-ல் பாடியது.

"அனாதரவென் னும்பிரம அத்திரத்தால் மாய்ந்து
தனாதுருவம் தேய்ந்து தனித்தே - வினாவற்ற
வாய்ந்த சுவையார் மணிமே கலைக்குமருந்
தீந்தியலச் செய்தாய் இனிது"

2."பூவே செந்தமிழைப் புரத்தலினாற் சிவபத்திப் பொலிவால் என்றும்
தாமேவு பரிசிலர்கள் கழறியதை அறிதலினால் தமிழ்வல் லோர்கள்
தேமேவும் உக்கிரபாண் டியனென்னச் சிவபாத சேகரப்பேர்த்
தூமேவு வளவனென சேரனென மிளிர்பாண்டித் துரைசீர் வாழ்க"

3. மு.இராமசாமிக்கவிராயர் மீது பாண்டித்துரையாருக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. கவிராயர் முதுமை எய்திச் சாகும் தறுவாயில் பாண்டித்துரைத்தேவர் சேற்றூர் சென்று கவிராயரின் உடல்நிலையைக் கண்டு வருந்தி இருக்கக் கவிராயர் பாடியது:

"முன்பாண்டிப் புரவலனும் சங்கம் வைத்தோர்
சாமமதின் முடுக்கி விட்டான்
இன்பாண்டித் துரையோசங் கப்புலவர்
தனிகரென இருத்தற் கெண்ணித்
தன்பாண்டில் தனைநடத்திப் பொருள்தேடிக்
கொண்டுவந்து தந்து காத்தே
என்பாண்டி எனுங்கடவுள் திருவருட்செல்
வமும்எய்தி இருக்கின் றானே"

பாண்டித்துரைத் தேவர் மீது பாடிய இரங்கற்பாக்கள்
திருநாராயணையங்கார் ஆற்றாது இரங்கிப் பாடியவை:

கலிப்பா

பூவாது காய்க்கும் பொழில்போற் புலவர்களுக்
கீவா னிருநிதிய மென்பதுகேட் டெஞ்ஞான்றும்
பாவாணர் சென்றடையும் பாண்டித் துரையரசை
ஆவா வுலகிழந்த தையகோ வையகோ,

தன்னைப் பொருவுதமிழ்ச் சங்கமே நம்பாண்டி
மன்னைப் பிரிந்தோம் வருந்தா யவனன்ப
ருன்னைப் புரப்பா ருனது துயர்தீரும்
என்னைப் புரப்பா ரினியா ரறியேனே.

செந்தமிழே யந்தோ சிறியை யுனைவளர்த்து
வந்தபாண் டித்துரைமன் வானடைந்த சோர்வொழிவாய்
முந்து தமிழுலகின் மூதறிஞ ராதரவு
தந்து வளர்ப்பார் தளரேல் தளரேலே.

கல்லூரி காளுமக்குக் கையுதவி செய்துவந்த
வல்லாளன் பாண்டித் துரைமன் மறைந்தனனே
எல்லோருங் கண்டிரங்கு மேழையரா னீர்பொருள்செய்
நல்லோ ரருள்வர் நலியீர் நலியீரே.

வெண்பா

சங்க நனிவளர்க்குந் தாளாளன் வானிலுள
சங்க நிதிகொணர்வான் சார்ந்தனனோ - அங்கிருக்கும்
சிந்தா மணிகொணர்வான் சென்றனனோ வொன்றுணரேன்
மைந்தார் புகழ்ப்பாண்டி மன்.

ஆ.கார்மேகக்கோனார் பாடியவை:

பற்றாயினார்களாற் றுறந்தார்க்கு முண்டியுடைபலவுமின்றி
யற்றோர்க்குமரும்புலவோர் தமக்குமினிதாந் தமிழெனன
ணங்கினுக்கு
மற்றோர்க்கு முறுதுணையாமாபாண்டித் துரையே யாமயங்கிவாடச்
சற்றேனு மருளுளத்திற் கொள்ளாது வான்சே றறகுதியாமோ. (க)

மண்ணாட்டுப்புல வருடன் வீற்றிருந்து தமிழாந்து மகிழ்ந்தநீபோய்
விண்ணாட்டுப் புலவருடனுறைந்து தமிழாய் வதற்குவிழைந்
தாய்போலு
முண்ணாட்டு மீகையன் பாலுயர்பாண்டித் துரையரசே
யும்பர்வாழவ்
வண்ணாட்டில் வழங்குவதுவட மொழியா மென்பதறிந்திலை
யோவள்ளால்

சீராமகதையமிர் துஞ்சிறப்புறுமின்னுரைய மிர்துஞ்சேர்ந்தவாயுங்
காராருங் கொடைக்கரமுமடை திறந்தாலொத்தவருட்
கமலக்கண்ணும்
வாராருந்தனமடவார் மடலெழுதுவனப்பு மதிமாண்பு மென்று
பாராருமக்களுள் யாரிடைக்காண்பாம் பாண்டியனே பகருவாயே(௩)

அன்னைபிதாவென வேன்னை யாதரித்துக்கல்வி நலமமையுமாறே
யன்னமுடன் கலையுதவிக்கலையளித்தவான் பாண்டித்துரையே
யந்தோ
பன்னுநலந்தமிழ்க் குழவி தனைப்பரிவோடினிக் காக்கப்பாரின்மீதே
யின்னொலுகாலெய் துவையோவின் முகநீகாட்டுவையோ
வியம்பிடாயே

மதுரைத் தமிழ்ச்சங்கத் தோற்றமும் பணிகளும்

முனைவர். வீ.காந்திமதி

"இனியுமோர் தமிழ்ச்சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை;

வியந்தது வையம் சென்றநாள் சிலவே;
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே"

- பாவேந்தர் பாரதிதாசன்.

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கென முச்சங்கங்கள் கண்டனர் பாண்டிய மன்னர்கள். சங்கம் அமைத்துத் தமிழாய்ந்த காரணத்தால், சங்ககாலம் எனப் பெயர்பெற்றது. மூன்றாவது சங்கமாம் கடைச்சங்கம் கி.பி. 2ஆம் நூற்றாண்டுவரை இருந்தது. இதன்பின்னர் தமிழ்மொழி வளர்ச்சிக்கென வேறு சங்கங்கள் தோன்றியதாகத் தெரியவில்லை. எனினும் கி.பி. 470ல் வச்சிரநந்தி என்பவரால் சமணத்தமிழ்ச்சங்கம் நிறுவப் பெற்றதாகவும், அது திராவிட சங்கம், திரமிளசங்கம் என்றழைக்கப் பெற்றதாகவும் தெரிகிறது. இச்சங்கத்தின் நிலைபேறு, பணிகள் பற்றிய பிற செய்திகள் காணக்கிடைத்தில.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் முடிவுற்ற தமிழ்ச்சங்கம், மீண்டும் கி.பி. 20ஆம் நூற்றாண்டில்தான் உயிர்பெற்றெழுந்தது. கடைச்சங்கத்தை நிறுவிய பாண்டியன் பெயர் உக்கிரப்பெருவழுதி.

இன்றைய மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் உக்கிரபாண்டியன் என்னும் இயற்பெயருடைய பாண்டித்துரைத் தேவர். 1901-ஆம் ஆண்டில் இச்சங்கம் தோற்றம் பெற்றபொழுது, அக்காலத்திலிருந்த ஞானபோதினி, விவேகபானு ஆகிய திங்கள் இதழ்கள், 'உக்கிரப்பெருவழுதி காலத்து கடைச்சங்கம் ஒடுங்கியது. ஒடுங்கிய இடத்தே உக்கிரபாண்டியன் என்னும் பெயருடைய வராலே பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் நான்காம் சங்கம் தோன்றியது' என்றவாறு புகழ்ந்து பாராட்டியுள்ளன.

பாண்டித்துரைத்தேவர், சேதுமன்னர் முத்துராமலிங்க சேதுபதி (1862-1873) அவர்களின் தமையனார் பொன்னுசாமித் தேவர் அவர்களின் மகனாவார். இவர்தம் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியினால், மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நிறுவிட வேண்டுமென்ற வேட்கை மிகுந்தது. 1901-ஆம் ஆண்டு மே 21, 22, 23 ஆகிய நாட்களில் மதுரையில் நடந்த சென்னை மாகாண அரசியல் மாநாட்டு விழாவில் வரவேற்புரை நிகழ்த்துவதற்காகப் பாண்டித்துரைத் தேவர், கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய இரண்டு நூற்களையும் மதுரைவாழ் தமிழறிஞர்களிடமிருந்து பெறுவதற்கு முயன்றனர். ஆனால் அவர்களிடம் சொந்தமாக அந்நூல்கள் இல்லை என்பதை அறிந்தார். சங்கம் இருந்த மதுரையில் தமிழுக்குக் கதி (*க- கம்பராமாயணம், தி - திருக்குறள்*) என்று சொல்லக்கூடிய இரண்டு நூல்கள் கிடைக்காதது கண்டுத் தமிழே 'கதி' இழந்துவிட்டதாகக் கருதி மனம் மிக வருந்தினர். இந்த நிகழ்ச்சி, 'மதுரையில் பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கத்தை நிறுவியது போலத் தாமும் ஒரு சங்கத்தை நிறுவவேண்டும்' என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. அரசியல் மாநாட்டு விழா முடிவில், தம் எண்ணத்தை மக்களிடையே எடுத்துரைத்தார். அரசியல் விழா முடிந்த மறுநாள், மே 24-ம் நாளில், சேதுபதி உயர்நிலைப் பள்ளியில், தமிழ்ச்சான்றோர்களை அழைத்துத் 'தமிழ்ச் சங்கம்' குறித்துக்

கலந்துபேசி ஆராய்ந்தார். அந்நாளிலேயே (1901 மே 24) தமிழ்ச் சங்க அமைப்பிற்குரிய விதிமுறைகள் வகுக்கப் பெற்றன.

பின்னர் 1901, செப்டம்பர் 14 -ம் நாளில் மதுரையில் 'நான்காம் தமிழ்ச்சங்கம்' ஒன்று கூட்டப்பெறும் என்று அழைப்பிதழ்களின் வாயிலாகவும், திங்களிதழ்களின் வாயிலாகவும் எல்லோருக்கும் அறிவிக்கப் பெற்றது. தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவிற்குப் பாஸ்கர சேதுபதி தம்முடைய பரிவாரங்களுடன் வந்திருந்தார். உ.வே. சாமிநாதையர், சேது சமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார், வை.மு. சடகோப ராமானுசாச்சாரியார், சோழவந்தான் அ. சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரியார், திருமயிலை சண்முகம்பிள்ளை, திருநாராாயணையங்கார், மு. இராகவையங்கார் ஆகியோரும் வந்திருந்தனர். இவர்களின் நல்லாசியுடன் மதுரை வடக்குவெளிவீதியில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் பாஸ்கர சேதுபதியின் திருமுன்பு, அறிஞர்கள் சூழ்ந்திருக்க, பிலவ வருடம் ஆவணித் திங்கள் முப்பத்தொன்றாம் நாள் (1901, செப்டம்பர் 14) ஞாயிற்றுக்கிழமை பானுவாரமும், சித்திரை நாண்மீனும் கூடிய நன்னாளில் பகல் 1.30 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் தனுர் லக்கனத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்றது. இந்நாளில் இச்சங்கம் தோன்றிய போதும், 1901, மே 24-ம் நாளில் சான்றோர் அவையில் முடிவுசெய்து அறிவித்த நாளே இச்சங்கம் தோன்றிய நாளாகக் கருதப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

தமிழ்ச்சங்கம் நிறுவுவதன் குறிக்கோள்கள் :

மதுரைத் தமிழ்ச் சங்க அறிக்கையில் (Memorandum of Association), தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்கான குறிக்கோள்கள் (The objects for which the Sangam is established) ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

1. தமிழ் மொழியைச் சிறப்பித்தலும், தமிழ் 'இலக்கியங்களை வளர்த்தலும்.
2. பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், அவ்வாறு முறைப்படி பயிலாதவர்களுக்கும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்வுகள் நடத்துதலும், அத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவோருக்குப் பதக்கங்கள், பரிசுகள் வழங்குதலும், தேர்ச்சி பெற்ற மற்றையோருக்குச் சான்றிதழ்கள் வழங்குதலும்.
3. தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் அட்டவணை தயாரித்தல், அவற்றின் ஆய்வுகளை நடத்துதல்.
4. பழமையான தமிழ்நூல்களில் தகுதியானவற்றை வெளிக் கொணர்ந்து பதிப்பித்தல், திங்கள் தோறும் செந்தமிழ் இதழை வெளியிடுதல்.
5. தமிழ் இலக்கியங்களை வளப்படுத்துவதற்காக, வடமொழி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலிருந்து நூல்களை மொழிபெயர்தல்; அறிவியல், சமயம், தத்துவம், தொழில்நுட்பம், அகராதிகள், நிகண்டுகள் ஆகியவற்றைப் பதிப்பித்து வெளியிடுதல்; தமிழ் மொழி, இலக்கியம் தொடர்பான சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல்.
6. தமிழ் நூல்களின் சரியான தெளிவான பதிப்புகளை வெளியிடுதல்.
7. மதுரையிலும் பிற இடங்களிலும் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் அடங்கிய நூலகங்களை நிறுவிச் செயல்படுதல்.
8. மேற்சொல்லிய குறிக்கோள்களுக்குரிய நிதிகளைத் தக்கவைத்துப் பயன்படுத்துதல், விலைக்கு வாங்குதல், ஏலம் விடுதல், மாற்றம் செய்தல், வாடகை வாங்குதல், அன்பளிப்புப் பெறுதல், அடமானம் வைத்தல், தனிச்சொத்துக்களைப் பயன்படுத்தல், சங்கத்தேவைக்கும் வசதிக்குமான

உரிமைகளைச் செயல்படுத்தல், சங்கத்திற்குரிய சொத்துக்களை விற்பதும் நிருவகிப்பதுமான செயல்களைச் செய்தல்.

9. நிதி நிலைமைக்கு ஏற்ற வகையில் செந்தமிழ்க் கலாசாலையை நிருவகித்தல்.

10. பல மையங்களில் நிறுவப்படும் கிளைச்சங்கள் உட்பட மேற்கூறிய குறிக்கோள்களைப் பெறுவதற்குத் தேவையானவற்றைச் செய்து கொள்ளுதல்.

இவ்வரிய குறிக்கோள்கள் சீரிய முறையில் செயல்வடிவம் பெற்றதைச் சங்கப் பணிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

உட்பிரிவுகள் :

தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றவும், சங்கம் நன்முறையில் இயங்கவும் நான்குவகை அமைப்புகள் நிறுவப் பெற்றன.

1. செந்தமிழ்க் கலாசாலை : இதன் மூலம் மாணவர்க்கு உண்டி, உடை, உறையுள் முதலியன கொடுத்துச் செந்தமிழ்க் கல்வி கற்பிக்கப் பெற்றது.

2 பாண்டியன் புத்தகசாலை : யாவரும் வந்து படிப்பதற்குரிய வகையில் பற்பல தமிழ் வடமொழி நூல்கள் இதில் தொகுத்து வைக்கப் பெற்றன.

3. தமிழ்ச்சங்க முத்திர சாலை : இதுவரை வெளிவராத நூல்களை அச்சில் கொணர்வதற்காக நிறுவப்பெற்றது.

4. செந்தமிழ் இதழ் : தாய்மொழிப் பற்றுமிக்கார் விரும்பிப் படிக்கும் வகையில் அறிவு நலம் தரும் ஆராய்ச்சி இதழாகத் திங்கள்தோறும் வெளியிடப் பெற்றது.

இந்நான்கு பிரிவுகளின் வழியாகத் தமிழ்க்கல்வியும், தமிழ்த் தேர்வுகளும், நூல் வெளியீடுகளும், நூலாராய்ச்சிகளும் சங்கத்தால் செவ்வனே மேற்கொள்ளப் பெற்றன.

நிருவாகப் பணிகள்:

இத்தமிழ்ச் சங்கத்தின் செயல்கள் அனைத்தையும் கவனிப்பதற்கென நிருவாகக்குழு இயங்கி வருகிறது. இக்குழு 1958-ம் ஆண்டு வரையில் நிர்வாகசபை என்றும், காரிய நிர்வாகசபை என்றும் அழைக்கப்பெற்றது. 1958-ம் ஆண்டிற்குப் பின்னர் செயற்குழு என்றும், 1971-ம் ஆண்டிலிருந்து ஆட்சிக்குழு என்றும் பெயர் பெற்றது.

சங்கத்தில் தலைவரே நிருவாகக் குழுவின் தலைவர் ஆவார். சங்க உறுப்பினர்களிலிருந்து பதின்மரை நிருவாகக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். சங்கத்தின் நடவடிக்கைகள் இக்குழுவினரது முழு ஒப்புதலுடன் சங்கத் தலைவரால் நிறைவேற்றப் பெற்றன. தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராவதற்கு விரும்பும் கல்வியாளரை நிருவாகக் குழுவினரே தேர்ந்தெடுத்தனர்.

தமிழ்ச் சங்கம் தோன்றிய நாளிலிருந்து சங்கத் தலைவர்களாக விளங்கியோர்.

1. பொன் பாண்டித்துரைத் தேவர் 1901 - 1911
2. பி.சா. சுப்பிரமணிய ஐயர் 1912
3. இராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி 1913 - 1928
4. தினகர பகதூர் 1928 - 1932
5. சண்முக ராசேசுவர நாகநாத சேதுபதி 1933 - 1967
6. பி.டி. இராசன் 1967 - 1971
7. இராமநாத சேதுபதி 1971 - 1979
8. இராணி இந்திரா தேவியார் 1979 - 1998
9. முகவை மன்னர் நா. குமரன்சேதுபதி 1998 முதல்

நிருவாகக் குழு உறுப்பினர்களுள் துணைத் தலைவராகவும், செயலாளராகவும், உறுப்பினராவும் விளங்கியவருள் குறிப்பிடத் தகுந்தோர்:

டி.சி. சீனிவாச ஐயங்கார், உ.வே. சாமிநாதையர், ஆண்டிபட்டி சமீன்தார் சா.ராம.மு.சித. பெத்தாச்சி செட்டியார், எஸ். பால்வண்ண முதலியார், ராவ்சாகிப். மாணிக்கவாசகம் பிள்ளை, மகிபாலன்பட்டி மு.கதிரேசன் செட்டியார், செ.மு. சையது முகமது ஆலிம் புலவர், நாவலர் சோமசுந்தர பாரதியார், என்.ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ். வையாபுரிப்பிள்ளை, வி. சண்முகசுந்தரம், கி பழனியப்பன், என்.எஸ். முத்துமலைச்சாமி, டி.பி.எம். பெரியசாமி, காசிநாததுரை, ஆ. ஆண்டியப்பன், மா. தனுக்கோடி பாண்டியன், மா. சங்கரபாண்டியன்.

இப்போதுள்ள தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுவினர் :

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி - தலைவர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் - துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை - செயலாளர்
திருமதி. இராணி லெட்சுமி நாச்சியார் - உறுப்பினர்
திரு. மா. சங்கரபாண்டியன் - உறுப்பினர்
டாக்டர் ந. சேதுராமன் - உறுப்பினர்
திரு. கே. கந்தசாமி - உறுப்பினர்
திரு. வெ. பழனிச்சாமித்தேவர் - உறுப்பினர்
திரு வே. திருவரங்கராசன் - உறுப்பினர்
திரு. க சி. அகமுடைநம்பி - உறுப்பினர்
திரு. ச பரங்குன்றம் - உறுப்பினர்
திரு. அ. சாமி ஐயா - உறுப்பினர்

சங்கக் கல்லூரி மாணவர்களின் கல்வி, ஆண்டுதோறும் நடத்தப் பெறும் விழாக்கள், நூலகம், செந்தமிழ் இதழ், கருத்தரங்குகள், நன்கொடைகள், சங்கத்தின் பொருளாதார நிலை, கட்டிடப்பணிகள், ஆசிரியர் அலுவலரின் பணிகள், வரவு, செலவுக் கணக்குகள் இவையாவும் ஆட்சிக்குழுவினரின் செயல்களாகும்.

கல்விப்பணிகள்.

தமிழ்ச் சங்கம் தோன்றிய 1901-ம் ஆண்டில் செந்தமிழ் கலாசாலையும் தொடங்கப்பெற்றது. இக்கலாசாலை இன்று வரையிலும், தமிழ்க்கல்வி ஒன்றையே கற்பிக்கும் கல்லூரியாகப் பணியாற்றி வருகிறது.

செந்தமிழ்க் கலாசாலையில் பயிலும் மாணவர்கள் கல்வியுடன் உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றைப் பாஸ்கர சேதுபதியின் பொருளுதவியால் பெற்றனர். அதனால் இக்கலாசாலை, 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்னும் பெயர் பெறலாயிற்று. பாஸ்கர சேதுபதியின் மறைவுக்குப் பின்னர், சேதுசமஸ்தானத்திலிருந்து வந்த உதவித் தொகைகள் நிறுத்தப்பட்டன. சேதுபதிகளது தனியார் துறை உரிமை (மேனேஜ்மெண்டு பாத்யதை) நீங்கியது. அதனால் 1912-ம் ஆண்டிலிருந்து 'தமிழ்ச்சங்கக் கலாசாலை' என்னும் பெயரமைந்தது.

1957-ம் ஆண்டுவரையில் பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய மூன்று நிலையில் தமிழ்க்கல்வி அமைந்தது. பிரவேச பண்டிதக் கல்வியில் ஓராண்டு படித்துத் தேர்ச்சிபெற்ற பின்னர், பாலபண்டிதக் கல்வி பெற வாய்ப்புக்கிட்டும். பாலபண்டிதமும் ஓராண்டு பயில வேண்டும். இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களே பண்டிதக்கல்வி பயில முடியும். பண்டிதக்கல்வி ஈராண்டுக்குரியது. பண்டிதத்தில் வெற்றி பெற்றவரே பண்டிதராக மதிக்கப்பெற்றார். இவ்வாறு இக்கல்விமுறை மூன்று நிலைகளை உடையதாய், நான்கு ஆண்டுகளில் கற்பிக்கப்பட்டு வந்தது. இங்குப் பயிலும் மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள், கல்வி இவையாவும் இலவசமாகக் கிடைத்தன. ஒருசிலர் மட்டும்

உணவிற்குரிய உதவித்தொகையைப் பெறாது படித்தனர். கல்வி நிலைகளுக்கு ஏற்ப இலவசமாகப் பெற்ற நூல்களும் அவர்களுக்கே சொந்தமாயின. 1915-ம் ஆண்டிற்குப் பின்னர்தான், மாணவர்கள் கல்விக்காகப் பெற்ற நூல்களைத் தேர்வு முடிந்தபிறகு தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தமிழ்ச் சங்கத்தின் தமிழ்க் கல்வி முறைகளைப் பின்பற்றியே வித்துவான், பி.ஓ.எல். முதலிய தமிழ்க்கல்வி நிலைகளைப் பல்கலைக் கழகங்களும் ஏற்படுத்தின. 1911-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் வித்துவான் கல்வியை ஏற்படுத்தியது. இக்கல்விக்குரிய பாடத்திட்டம், சங்கத்தார் தமது மாணவர்க்கு வைத்துள்ள பாடத்திட்டமாகவே அமைந்தது. 1913-ம் ஆண்டிலிருந்து சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குச் செந்தமிழ்க் காலாசாலை மாணவர்கள் அனுப்பப் பெற்றனர். இம்மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வு எழுதியும் பட்டம் பெற்றனர். தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வெழுதியும் பட்டம் பெற்றனர். சங்கத்தார் வழங்கிய சான்றிதழ்கள், அரசுப்பணிகளில் அமர்வதற்குப் பயன்பட்டன.

ஆண்டுதோறும் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்குவதும் இச்சங்கத்தின் பணியாகும். தமிழ்ச் சங்கக் கலாசாலையில் பயிலும் மாணவர்களும், தனித்துத் தாமே பயில்வோரும் தமிழ்ச் சங்கம் நடத்தும் தேர்வுகளை எழுதினர். வெற்றி பெற்றோருக்குத் தமிழ்ச்சங்கப் புலவர் என்ற பட்டத்துடன் சான்றிதழ்களை இச்சங்கம் வழங்கியது. உயர்நிலைப் பள்ளிகளில் இறுதி வகுப்பில் பயில்வோருக்கும், கல்லூரிகளில் மெட்ரிகுலேசன் எப்.ஏ,பி.ஏ, பயில்வோருக்கும் தமிழ்ப் பாடத்திற்குரிய தேர்வுகளை நடத்தி வந்தனர். அரசு, பல்கலைக்கழகம் நடத்தும் தேர்வுகளுக்கு முன்பாக, இத்தேர்வுகளை நடத்தி, தேர்வு முடிவுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினர். இத்தேர்வுகள் ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைகள் எனப்பட்டன.

ஒவ்வொரு தேர்விலும் முதல் வகுப்பில், முதன்மை மதிப்பெண் பெறும் மூன்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. முதல் பரிசுகள் யாவும் தங்கம், வெள்ளிப் பதக்கங்களாகக் கல்வி நிலைகளுக்கு ஏற்றாற் போல் வழங்கப்பட்டன.

பண்டிதக்கல்வி	- ரூ. 100	க்குரிய தங்கப் பதக்கம்
பாலபண்டிதம்	- ரூ. 70	க்குரிய தங்கப் பதக்கம்
பிரவேச பண்டிதம்	- ரூ 50	க்குரிய தங்கப் பதக்கம்
பி.ஏ	- ரூ 50	க்குரிய தங்கப் பதக்கம்
எப்.ஏ	- ரூ 40	க்குரிய தங்கப் பதக்கம்
மெட்ரிக்குலேசன்	- ரூ 30	க்குரிய தங்கப் பதக்கம்

இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் பணமாக அமைந்தன. தேர்வு நடத்துதல், சான்றிதழ், பரிசுகள் வழங்குதல் இவையாவும் கலாசாலையின் பணிகளாக அல்லாமல் சங்கத்தின் பணிகளாக அமைந்தன.

1957 - ம் ஆண்டிற்குப் பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற தமிழ்க் கல்லூரியாக மாற்றம் பெற்றது. செந்தமிழ்க் கலாசாலை என்பது, செந்தமிழ்க் கல்லூரியாகப் பெயர் பெற்றது. இக்கல்லூரியின் தொடக்க விழா 1957ம் ஆண்டு சூலை 3-ம் நாளில் நிகழ்ந்தது. மதுரைப் பல்கலைக்கழகம் தொடங்கிய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரியாகத் திகழ்கிறது.

வித்துவான் முதனிலை - இரண்டு ஆண்டுகளும், வித்துவான் இறுதிநிலை - இரண்டு ஆண்டுகளுமாகக் கல்வி நிலைகள் அமைந்தன. 1968-ம் ஆண்டில் புகுமுகவகுப்பும், 1969-ம் ஆண்டில் இளங்கலை வகுப்பும் தொடங்கப் பெற்றன. இளங்கலைக் கல்வியில் ஆங்கிலமும் சிறப்புத் தமிழும் பாடமாக அமைந்தன. புலவர் (வித்துவான்) கல்விநிலையை ஓரியண்டல் கல்லூரி என்றும், இளங்கலைக் கல்விக்குரியதாகக் கலைக் கல்லூரி

என்றும் பிரித்துச் சங்கத்துடன் இரண்டு வகைக் கல்லூரிகள் நடைபெறும் நிலை 1969-ல் ஏற்பட்டது. 1976-ம் ஆண்டிலிருந்து புலவர் வகுப்புகள், மதுரைப் பல்கலைக்கழகத்தாரின் ஆணைப்படி பி.லிட் பட்ட வகுப்புகளாயின. 1979-ம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத் திட்டத்தின்படி பருவமுறைக் கல்வியாக இக்கல்லூரிக் கல்வியும் அமைந்தது. 1979-ம் ஆண்டிலிருந்து முதுகலையும், 1986-ம் ஆண்டிலிருந்து எம்.ஃபில் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1957-ம் ஆண்டிற்குப்பின்னர் தமிழ்ச் சங்கத்தார், நுழைவுத் தேர்வு (பிரவேசம்), இளம்புலவர் தேர்வு (பாலபண்டிதம்), புலவர் தேர்வு(பண்டிதம்) என்ற மூன்றுவகையாகத் தேர்வுகளை நடத்தினர். இவை தனித்தமிழ்த் தேர்வுகள் எனப் பெயர் பெற்றன. இத்தேர்வுகளைச் செந்தமிழ்க் கல்லூரியில் பயிலுவோர் எழுதுவதில்லை. தனியாகப் படித்து எழுதுவோருக்கு இத்தேர்வுகள் உரியவாயின. இவற்றில் வெற்றி பெற்றோருக்குத் தமிழ்ச் சங்கப் புலவர் என்றே பட்டம் வழங்கப் பெற்றன. சங்கம் வழங்கிய பட்டமும், சான்றிதழும் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிவதற்குரிய தகுதிக்குரியனவாயிருந்தன. 1977-ம் ஆண்டுற்குப் பின்னர் நின்று போயின.

பள்ளி இறுதி வகுப்பு, கல்லூரிகளில் பட்ட வகுப்பு ஆகியவற்றில் தமிழ்ப் பாடத்தில் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கி வந்த நிலையில், கல்லூரியில் பருவமுறைக் கல்வி வந்ததன்பின், பள்ளிக் கல்விக்கு மட்டுமே சங்கத் தேர்வுகள் நடத்தபடுகின்றன. உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பிற்கும், மேல்நிலைக் கல்வியில் பன்னிரெண்டாம் வகுப்பிற்குரிய பொதுத் தமிழ், சிறப்புத் தமிழ் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் தேர்வுகள் நடைபெறுகின்றன.

இவ்வாறு தமிழ்ச் சங்கத்தின் கல்விப் பணியும், தேர்வுப் பணியும் இன்றளவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

அச்சகப் பணிகள்

தமிழ்ச்சங்க முத்திராசாலை - பவர் பிரஸ், 1902 -ம் ஆண்டு ஆகஸ்டு 29-ம் நாளில் தொடங்கப் பெற்றது. இது மதுரை நகரில் முதன் முதலாகத் தோன்றிய அச்சகமாகும்.

செந்தமிழ் இதழும், தனித்துப் பதிப்பித்த சங்கப் பிரசுரங்களும், பிற சங்கப் பதிப்பு நூல்களும் தமிழ்ச்சங்க அச்சகத்தின் பணியில் வெளிவந்தன. வெளி வராத சுவடிவடிவிலேயே நின்று விட்ட அரிய பல தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகம் காணுமாறு செய்த பணிக்கு நூல் வெளியீடுகள் சான்றுகளாகின்றன இதனால் தமிழ்ச் சங்கத்தின் நூலாராய்ச்சித் துறையும், பதிப்புத் துறையும் மேன்மேலும் வளர்ச்சியடைந்தன.

பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி, தோத்திரத் திரட்டு, பெருந்தொகை ஆகிய தொகுப்பு நூல்கள் வெளியிடப் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

புதிதாக இயற்றப்பட்ட நூல்களையும், பலர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூலாக வெளியிட்டுச் சங்கத்தார் எழுத்தாளர்களையும், ஆய்வாளர்களையும் உருவாக்கியுள்ளனர்.

வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்புகளை வெளியிட்டு மொழி பெயர்ப்புத் துறையை வளர்த்துள்ளமை புலப்படுகிறது. தமிழில் தோன்றிய முதல் கலைக் களஞ்சியம் என்ற பாராட்டைப் பெற்ற அபிதான சிந்தாமணியைப் பதிப்பித்ததும், தமிழ்ச் சொல்லகராதி நூலை வெளியிட்டதும் அச்சகப் பணிக்குச் சிறந்த சான்றுகளாகும்.

1956 ம் ஆண்டு வரையில் அச்சகத்தின் பதிப்புப் பணியும், வெளியீட்டுப் பணியும் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கின்றன என்பது புலனாகிறது. 1957-ல் வெளிவந்த செந்தமிழ் 53-வது தொகுதி வேறு அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. 1957-ம் ஆண்டிற்குப் பின்னர் இவ்வச்சுக்கூடம் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கவில்லை.

நூலகப்பணிகள்

'பாண்டியன் புத்தக சாலை' என்னும் பெயருடைய நூலகம் 1901 முதல் 1902ம் ஆண்டுவரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வந்தது. பின்னர் இப்பொழுதுள்ள தமிழ்ச்சங்க வீதியில் உள்ள பாண்டித்துரைத் தேவரின் மாளிகைக்கு மாற்றம் செய்யப்பெற்றது. 1902ம் ஆண்டிலிருந்து இன்றுவரை அம்மாளிகையிலேயே நூலகம் இயங்கி வருகிறது. இப்போது 2001ம் ஆண்டில் நூலகக் கட்டிடம், புதிதாகக் கட்டப் பெற்றது, தலைசிறந்த நன்மாளிகையாக விளங்குகிறது. இம்மாளிகையில் தமிழ்ச்சங்கத்தின் உயர்வை உணர்த்தும் பெருமைக்குரிய நூலகம் இயங்கி வருகிறது.

பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள், வரலாறு, சோதிடம், மருத்துவம், சமயம், தத்துவம், புராணம் ஆகியன பற்றிய நூல்களும், பழைய ஏட்டுச்சுவடிகளும் இந்நூலகத்தில் பாதுகாப்புடன் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. நூலகம் தொடங்கிய காலத்தில் பொதுமக்களும் படித்துப்பயனடையும் வகையில் விளங்கியது. இப்போது, அரசு நூலகங்கள் பல தோன்றியிருப்பதாலும், நூலகத்தில் உள்ள அரிய பழைய நூல்களைப் பாதுகாத்தல் வேண்டுமாதலாலும், இந்நூலகம் பொதுமக்களுக்குப் பயன்படும் பாங்கினைக் குறைத்துள்ளது. ஆனால் நூலாராய்ச்சி செய்வோருக்கும்,

மேற்படிப்பு(M.Phil,Ph.D.,) படிப்போருக்கும் பயன்படும் வகையில் திகழ்வது இந்நூலகத்தின் தலைசிறந்த பணியாகும்.

கல்லூரி மாணவர்கள் கற்பதற்குரிய நூல்கள் ஒரு பகுதியாகவும், தமிழ்ச்சங்க நூல்கள் ஒரு பகுதியாகவும் இருபிரிவுகளாக நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ச்சங்க நூல்கள் யாவும் மிகப் பழமையானவை. இந்நூல்களை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த லாமேயன்றி, எடுத்துச்செல்ல இயலாது. இன்றைய நிலையில் இந்நூலகம் ஓர் ஆய்வு மையமாகத் திகழ்கிறது என்று கூறலாம்.

செந்தமிழ் இதழின் பணிகள்

தமிழ்ச்சங்கச் சான்றோர்களும், பிற அறிஞர்களும் தங்களின் ஆராய்ச்சிகளை வெளியிடுவதற்கு ஏதுவாகச் 'செந்தமிழ்' இதழ் தொடங்கப்பெற்றது."இது தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கு அறிவுறுத்தலானும், செவ்விதான தமிழாலே நடத்தலானும் 'செந்தமிழ்' எனப் பெயர் பெற்று விளங்குகிறது" என்று ரா. இராகவையங்கார் குறித்துள்ளார். 1902ம் ஆண்டு டிசம்பர் ஏழாம் நாளில் செந்தமிழ் இதழின் முதல் பகுதி வெளியிடப் பெற்றது.

செந்தமிழ் இதழில் மிகுதியும் இலக்கிய இலக்கணங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளே இடம் பெற்றன. 'தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்களுக்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையாம்' என்பது எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கூற்றாகும்.

'பவர் பிரஸ்' என்னும் தமிழ்ச்சங்க முத்திரா சாலையிலிருந்தே செந்தமிழ் இதழ்கள் வெளியிடப் பெற்றன.

ஒவ்வொரு தமிழாண்டின் கார்த்திகைத் திங்களில் தொடங்கிப் (ஆங்கில ஆண்டில் டிசம்பர்) பன்னிரு திங்களும் ஒவ்வொரு பகுதியாக வெளிவந்தன. பன்னிரெண்டு பகுதிகளும் சேர்ந்து ஒரு தொகுதியாகும். திங்கள் ஒருமுறை வெளியான செந்தமிழ் இதழ், அறுபத்துமூன்றாவது தொகுதியிலிருந்து 1967-68ம் ஆண்டு முதல் ஒரு சில ஆண்டுகள் மூன்று திங்களுக்கு ஒருமுறை ஆண்டுக்கு நான்கு பகுதிகளாக வெளியிடப்பெற்றது.

நிறைவு:

தமிழ் மொழி வளர்ச்சி ஒன்றையே உயர்ந்த நோக்கமாகக் கொண்டு நூறு ஆண்டுகளாகச் செயலாற்றி வரும் நிறுவனமாக மதுரைத் தமிழ்ச்சங்கம் விளங்குகிறது. இத்தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப்பணி உயர்ந்தது, சிறந்தது. இன்றுவரை சிறந்து விளங்கும் தமிழ்ச்சங்கத்தின் நற்பணிகள் இனியும் பன்னூறு ஆண்டுகள், பல்லாயிரம் ஆண்டுகள்வரை மேன்மேலும் உயர்ந்து சிறந்து தழைக்கும் என்பது வெள்ளிடை மலை.

வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களது வாழ்க்கைக் குறிப்புகள்

1. பெற்றோர் : வள்ளல் பொன்னுச்சாமித் தேவர் (தந்தை)
பர்வதவர்த்தினி நாச்சியார் (தாயார்)

2. பிறந்த நாள் : 21 - 03 - 1867
இடம் : கௌரி விலாசம், அரண்மனை, ராஜவீதி, இராமநாதபுரம்.

3. பெற்றோர்
இட்ட பெயர் : உக்கிரபாண்டியன்
வழங்கிய பெயர் : பாண்டித்துரை

4. உடன் பிறப்புக்கள் : கோட்டைச்சாமி என்ற பெரியசாமி (தமையன்)
சிவஞானம் என்ற சீமைச்சாமி (தமையன்)

5. தந்தை பொன்னுச்சாமித்தேவர் மறைவு: கி.பி.1870

6. இளமைப்பருவ வளர்ப்புப் பொறுப்பாளர்: இராமநாதபுரம் சேஷாத்திரி ஐயங்கார்

7. தமிழ் கற்பித்தவர் : இராமநாதபுரம் அழகர் ராஜு
சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார்

8. ஆங்கிலம் கற்பித்தவர் : வக்கீல் வெங்கடேச சாஸ்திரி

9. பயின்ற பள்ளி : சுவார்ட்சு உயர்நிலைப்பள்ளி,

இராமநாதபுரம்.

10. பள்ளித் தோழர் : பூச்சி சீனிவாச ஐயங்கார் (அரியக்குடி இராமானுஜ ஐயங்காரது குரு)

11. ஜமீன் பொறுப்பு ஏற்பு : 04 - 04 - 1884

12. புதுமனை புகுதல் : சோமசுந்தர விலாசம், ராஜவீதி, அரண்மனை, இராமநாதபுரம். 1893.

13. அ) திருமணம் : முதல் மனைவி நாகம்மை நாச்சியார். (குழந்தையில்லை)

இரண்டாம் மனைவி துரைக்கண்ணு நாச்சியார் (குழந்தை இல்லை)

ஆ) வளர்ப்புமகன் : சோமசுந்தர பாண்டியன் (இளமையிலேயே இறப்பு)

14. அரசியல் பணி : 1)மதுரையில் 1901ம் ஆண்டு மே மாதம் 21,22,23,ல் சென்னை மாகாண அரசியல் மாநாடு கூட்டியது, வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றியது.

2) தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் நிறுவனம் அமைப்பு(1905) நிறுவனத் தலைவர்.

15. தமிழ்ப்பணி : 1) மதுரையில் தமிழ்ச்சங்க அமைப்புப் பற்றிய ஆலோசனைக் கூட்டம்

கூட்டியது. 24-05-1901.

2) மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவியது. 14-09-1901. தலைமை ஏற்றது.

3) சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை தொடங்கியது. 14-09-1901.

4) பாண்டியன் நூல் நிலையம் தொடங்கியது. 14-09-1901.

5) தமிழ் ஆய்வு மையம் தொடங்கியது 14-09-1901.

6) செந்தமிழ் (இதழ்) தொடக்கம்.கி.பி.1903

7) பாளையங்கோட்டை, தஞ்சை, திருவாரூர், சென்னை, சிதம்பரம் ஆகிய ஊர்களில் சைவ சிந்தாந்த மாநாடுகளில் சொற்பொழிவுகள்.

16. தொகுத்து வெளியிட்ட நூல்கள்

1) பன்னூல் திரட்டு (கி.பி. 1898லும், கி.பி.1906லும் வெளியீடு.	தேவாரம் முதல் திருக்குறள் வரை 96 121 பாடல்களில் இருந்து 1647 பாடல்கள் தொகுப்பு.
2) சைவ மஞ்சரி	ஐம்பதிற்கும் மேற்பட்ட சைவத் தமிழ் இலக்கியங்களில் இருந்து 1316 பாடல்களைத் தொகுத்து வெளியீடு.

3) நாற்கவிராசநம்பி அகப்பொருள் உரை 1911

4) திருவாலவாய்த்
திருப்பணிமாலை

5) மதுரைத்தல வரலாறு

6) இலக்குமி தோத்திரம்

17. உதவி பெற்று வெளிவந்த நூல்கள் - நிதிஉதவி பெற்றவர்கள்

1) புறப்பொருள் வெண்பாமாலை	உ.வே.சாமிநாதையர்
2) மணிமேகலை	உ.வே.சாமிநாதையர்
3) மதுரை திருவிளையாடற் புராணம்	உ.வே.சாமிநாதையர்
4) தேவாரத் தலமறை வைப்பு	செ. இராமசாமிப்பிள்ளை
5) சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (1892)	செ. இராமசாமிப்பிள்ளை.
6) சிவ சமவாத உரை மறுப்பு	சபாபதி நாவலர்
7) தண்டியலங்கார உரை	சுன்னாகம் குமாரசாமித் தம்பிரான்.
8) அபிதான சிந்தாமணி(1911)	சென்னை சிங்காரவேலு முதலியார்
9) ஞானமிர்தம்	சேத்தூர், சுப்பிரமணியக் கவிராயர்.
10) வில்லிபாரதம்	சேத்தூர், சுப்பிரமணியக் கவிராயர்.

11) சாதக சந்திரிகை(1897)	திருநாரண ஐயங்கார்.
12) மெய்கண்ட சாத்திரம்(1910)	காஞ்சிபுரம், நாகலிங்க முனிவர்
13) பாண்டியம் (1910)	திருநாரண ஐயங்கார்
14) **தமிழ்ச் சொல் அகராதி**	**யாழ்ப்பாணம், கதிரைவேற் பிள்ளை**
15) **சோழவம்ச சரித்திரச் சுருக்கம்**	**டி.ஏ. கோபிநாத் ராவ்**

18. ஆதரவு பெற்ற புலவர் பெருமக்கள்

1. டாக்டர். உ.வே. சாமிநாதையர், சென்னை.
2. அரசன் சண்முகனாரார், சோழவந்தான்.
3. புலவர் ராமசாமிப்பிள்ளை, மதுரை.
4. சபாபதி நாவலர், மதுரை.
5. சிங்காரவேலு முதலியார், சென்னை..
6. சுப்பிரமணியக் கவிராயர், சேற்றூர்.
7. திருநாரண ஐயங்கார், எதிர்க்கோட்டை.
8. சிவஞான பிள்ளை, இராமநாதபுரம்.
9. சிவகாமியாண்டார்.
10. சுந்தரேச ஐயர்.
11. சாமி ஐயங்கார், எட்டயபுரம்.
12. அரங்கசாமி ஐயங்கார்.
13. ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணம்.

14. சுன்னாகம் குமாரசாமிப் புலவர், யாழ்ப்பாணம்.

15. நாவலர். குலாம்காதிர், நாகூர்.

16. புலவர். அப்துல் காதிர் ராவுத்தர், சோதுகுடி.

19. இசைப் புலவர்கள்

1. பட்டணம் சுப்பிரமணிய ஐயர்

2. வையை. மகாவைத்திய நாதைய்யர்

3. தஞ்சை நாராயண சாமியப்பா

4. திருக்கோடிக்கா கிருஷ்ணஐயர்

5. பூச்சி. சீனிவாச ஐயங்கார்

20. நாடகப் புலவர்கள்

1. பெரிய மகாதேவ ஐயர், சென்னை.

2. சின்ன மகாதேவ ஐயர், சென்னை.

21. இயற்றிய நூல்கள்

1. சிவஞானபுரம் முருகன் காவடிச்சிந்து.

2. சிவஞான சுவாமிகள் பேரில் இரட்டை மணிமாலை

3. இராஜ ராஜேஸ்வரி பதிகம்

4. தனிப்பாக்கள்

22. புகழுடம்பு எய்தியது - இராமநாதபுரத்தில், 02-12-1911.

நன்றி: டாக்டர். எஸ்.எம். கமால்.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆341116